# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI

O.S. No.200 of 2022

Deposition of PW.1

Name of the Witness: **திருமதி.கௌரம்மாள்**

Date : 20.04.2026

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (3ம் பிரதிவாதி தரப்பில்)**

8) பாலக்கோடு நீதிமன்றத்தில் OS.118/2017 வழக்கை தேவேந்திரன், முனுசாமி மீது போட்டேன். அந்த வழக்கில் சொத்துக்களை வாங்கிய நபர்களை தரப்பினராக நான் சேர்க்கவில்லை, அந்த சொத்துக்கள் என்னுடைய அனுமதியின் பேரில்தான் விற்கப்பட்டது. அந்த வழக்கில் நான் விற்ற சொத்துக்களின் கிரய பத்திரங்களை செல்லாது என்று பரிகாரம் கேட்டு பின்னர் அதனை அடித்துவிட்டேன் என்றாலும் ஆனால் விற்ற சொத்துக்களின் கிரய பத்திரங்கள் அந்த வழக்கு கோப்புகளில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

9) என்னுடைய இந்த OS.118/2017 வழக்கிலும் அதன் மேல் தாக்கல் செய்யப்பட்ட அப்பீல் வழக்கிலும் மேல் முறையீட்டிலும் என்னுடைய அனுமதியின் பெயரில்தான் சொத்துக்கள் விற்கப்பட்டது என்று சொல்லி இருக்கிறேனா என்றால் ஞாபகமில்லை. நான் அது போல சொல்லவில்லை என்றால் சரியல்ல. OS.118/2017 வழக்கு தேவையான தரப்பினரை சேர்க்கப்படாததால் தான் தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரியல்ல. இந்த

வழக்கிலும் தேவையான தரப்பினரை சேர்க்கப்படாததால் தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல. சொத்துக்களை வாங்கிய நபர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

10) 3ம் பிரதிவாதி தேவேந்திரனின் தந்தை பெயர் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி முனுசாமி, 3ம் பிரதிவாதிக்கு நெருங்கிய நண்பர். இந்த வழக்கில் தேவேந்திரனின் அப்பா பெயர் முருகேசன் என்று சொல்லி இருந்தால் அது தவறு . தாவாவில் 12வது பத்தியில் 4ம் பிரதிவாதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி இந்த வழக்கிலேயே இல்லை. 3ம் பிரதிவாதியின் பதிலுரையில் 9ம் பத்தியில் குறிப்பிட்டும் அது பற்றி நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

11) 3ம் பிரதிவாதி தன்னுடைய பதிலுரையில் AS.11/2019 வழக்கு நிலுவையில் இருக்கும்போது OS.118/2017 வழக்கின் முன்னர் ஏற்படுத்தப்பட்ட கிரய ஆவணங்களான 18.10.2010 பதிவு எண்.1937/2010, கிரய ஒப்பந்த பத்திரம் தேதி 29.09.2011 பதிவு எண்.1658/14, கிரய ஒப்பந்த பத்திரம் தேதி 05.09.2014 பதிவு எண்.1412/2014, கிரய பத்திரம் தேதி 09.03.2020 பதிவு எண்.461/2020, கிரய பத்திரம் தேதி 01.07.2020 பதிவு எண்.1043/2020 கண்டுள்ள நபர்களை இந்த வழக்கில் சேர்க்காததாலும் அந்த ஆவணங்களை பற்றி இந்த வழக்கில் எந்த பரிகாரமும் கேட்காததால் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள நிலையிலும் நான் மேல் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

12) தாவா சொத்து தற்போது என்னுடைய அனுபவத்தில்தான் உள்ளது. சீனிவாசனுக்கு நான் என் சகோதரர்கள் மூலம் 1.7.2020 அன்று விற்கும்போது சொத்து விவரத்தில் தேவேந்திரன் இடத்தை கிழக்கு பக்க செக்குபந்தியாக காட்டியிருக்கிறேன் என்றால் எனக்கு தெரியாது. சீனிவாசனுக்கு நான் என் சகோதரர்கள் மூலம் 11.02.2013 அன்று ஆவண எண்.1461/2014 விற்கும்போது சொத்து விவரத்தில் தேவேந்திரன் இடத்திற்கு கிழக்கு என்று செக்குபந்தியாக காட்டியிருக்கிறேன் என்றால் எனக்கு தெரியாது. சீனிவாசனுக்கு நான் என் சகோதரர்கள் மூலம் 11.02.2013ல் ஆவண எண்.1462/2014 விற்கும்போது சொத்து விவரத்தில் தேவேந்திரன் இடத்திற்கு கிழக்கு என்று செக்குபந்தியாக காட்டியிருக்கிறேன் என்றால் எனக்கு தெரியாது.

13) நான் சொத்தை விற்றுவிட்டதால் சொத்தை விற்ற பத்திரங்களில் பிரதிவாதி தேவேந்திரனின் சுவாதீனத்தை ஒப்பு கொண்டுள்ளதால் நான் தாவா சொத்தில் சுவாதினத்தில் இல்லை என்றாலும் நான் கட்டியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. தேவேந்திரனுக்கு சொத்து விற்றதை தெரிந்தும் 3 ஆண்டுகளுக்குள் வழக்கு போடாமல் கால தாமதமாக வழக்கு போட்டுள்ளதால் இந்த வழக்கு கால தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2017லே தேவேந்திரனுக்கு சொத்துக்களை விற்றதை தெரிந்து பின்னும் உடனடியாக நடவடிக்கை எடுக்காமல் 2022ல் இந்த வழக்கு தாக்கல் செய்தது சட்டப்படி இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

14) தற்போது தாவா சொத்து மதிப்பு ரூ.1 கோடி இருக்கும். தற்போது தாவா சொத்தின் மதிப்பு அதிகமாகிவிட்டதால் சீனிவாசனின் தூண்டுதலின் பேரில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் முன்னால் நான் போட்ட வழக்கிலும் இந்த வழக்கிலும் வழக்கை நடத்த முன்வரவில்லை என்றால் சரிதான். நானும் 1,2 பிரதிவாதிகளும் கூட்டாக சேர்ந்து கொண்டு இந்த வழக்கினை 3ம் பிரதிவாதிக்கு எதிராக சொத்தை அபகரிக்க வேண்டும் என்று வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தேவேந்திரன் பெயரில் வருவாய் ஆவணங்கள் 15 ஆண்டுகளுக்கு முன்பே மாறி அவருடைய அனுபவத்தில்தான் உள்ளது என்றாலும் அதனை மறைத்து வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் என் அப்பா மீதும் உடன் பிறந்த சகோதரர்கள் மீதும் என்னுடைய பாகத்தை விற்றுவிட்டதால் போலீசில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே தாக்கல் செய்த வழக்குகளை இந்த வழக்கில் மறைத்ததால் Sec 11 CPC படி இந்த வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதி மீது செலவுத்தொகையுடன் தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.